# *DEPOSITION OF WITNESS*
## IN THE COURT OF Additional CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| **MCOP No. 208/2020** | **நாள் – 21.11.2025** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.அருள் | தந்தை பெயர் | திரு.கோவிந்தராஜ் |

**1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட போது 1ஆம் எதிர்மனுதாரரின் வாகனம், 2ஆம் எதிர்மனுதாரரின் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றாலும், விபத்து தேதியன்று காப்பீடு பாலிசி நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். 1ஆம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் விபத்து தேதியில் இருந்தது என்றால் சரிதான். எனது தந்தை அஜாக்கிரதையாக சாலையை கடந்து சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு விபத்து நடந்தபோது 60 வயதுக்கு மேல் இருந்தது என்றாலும், வயது முதிர்வின் காரணமாக சாலையின் வரும் வாகனத்தை கவனிக்காமல் திடீர் என்று சாலையை கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டதாலும், 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனரின் மீது தவறு இல்லை என்றாலும் எனக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1ஆம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோன எனது தந்தையின் வயது வருமானத்தை காட்டக்கூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தது எந்த இடத்தில் என்றால் திருப்பனந்தாள் எஸ்எஸ். கோழிபண்ணை என்ற இடத்தில் நடந்தது. அடிபட்டவுடன் எனது தந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாரா என்றால் திருப்பனந்தாள் தனியார் மருத்துவமனையில் சேர்த்த போது எனது தந்தையின் காதிலும்,மூக்கிலும் ரத்தம் வந்ததால் உடனடியாக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்துவிட்டோம். கும்பகோணம் அரசு மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர் எனது தந்தை இறந்துவிட்டதாக கூறினார். மூர்த்தி, நான், மஞ்சுளா ஆனந்தி ஆகியோருக்கு திருமணம் ஆகி தனித்தனியாக வசித்து வருகிறோம் என்றால் நானும் எனது தாயாரும் ஒரே வீட்டில் வசித்து வருகிறோம். மற்றவர்கள் தனித்தனியாக வசித்து வருகிறார்கள். விபத்து சமயத்தில் எனது தந்தைக்கு என்ன வயது என்றால் 60 வயது இருக்கும். எனது தந்தை எந்த வேலையும் பார்க்கவில்லை என்றாலும், வீட்டில் தான் இருந்தார் என்றாலும், இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக மனுவில் எனது தந்தை மாதம் ரூ.30000 வருமானம் ஈட்டியதாகவும், அவர் வருமானத்தை நாங்கள் நம்பி இருந்ததாகவும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் விவசாய வேலை பார்க்கிறேன். எனது தந்தையின் வருமானத்தை நம்பி நாங்கள் யாரும் இல்லை என்றால் சரியல்ல. அவரவர்கள் சம்பாதித்து குடும்பத்தை நடத்தி வருகிறோம் என்றால் எனக்கும் என் தாயாருக்கும் மட்டும் என் தந்தை உதவியாக இருந்தார். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டியவர் வாகன விதிகளை முறைப்படியாக

கடைபிடித்து வாகனத்தை ஓட்டி வந்தார் என்றாலும், எனது தகப்பனார் சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையின் குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது தந்தையின் கவனக்குறைவால் நடந்தது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் எங்களுக்கு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் யாரும் தந்தையின் வருமானத்தை நம்பி இருக்கவில்லை என்றாலும், மனுவிற்காக நம்பி இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தயாரும், தகப்பனாரும் தனியாக வசித்து வந்தார்கள் என்றாலும், மனுவிற்காக அனைவரும் சேர்ந்து வசித்தாக பொய்யாக கூறுகிறோம்என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*

***DEPOSITION OF WITNESS***
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 208/2020** | **நாள் – 18.11.2025** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.அருள் | தந்தை பெயர் | திரு.கோவிந்தராஜ் |
| ஊர் | மட்டியூர் | தாலுக்கா | திருவிடைமருதூர் |
| தொழில் | விவசாயம் | வயது | 45 |

**முதல் விசாரணை:**

நான் அசல் மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 11.09.2018 **தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை உண்மை நகல்** |
| ம.சா.ஆ.2 | 12.09.2018 தேதியிட்ட கும்பகோணம் அரசு மருத்துவமனை வழங்கி பிரேதபரிசோதனை அறிக்கை உண்மை நகல். |
| ம.சா.ஆ.3 | 30.09.2018 தேதியிட்ட இறந்த கோவிந்தராஜின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல். |
| ம.சா.ஆ.4 | 07.03.2020 தேதியிட்ட இறந்த கோவிந்தராஜின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல். |
| ம.சா.ஆ.5 | 21.12.2015 தேதியிட்ட ரவி விஜயராகவன் என்பவரின் ஓட்டுனர் உரிமம் நகல். |

| | |
|---|---|
| | (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| ம.சா.ஆ.6 | 07.07.2018 தேதியிட்ட எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு பாலிசி நகல்.(ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| ம.சா.ஆ.7 | எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன பதிவு சான்று நகல்.(ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| ம.சா.ஆ.8 | 1ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல். (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.9 | 1ஆம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்.(நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.10 | 2ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல்.(நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.11 | 2ஆம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்.(நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.12 | 3ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல். (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.13 | 3ஆம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்.(நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.14 | 4ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல். (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.15 | 4ஆம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்.(நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.16 | 5ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல்.(நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.17 | 5ஆம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்.(நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

மனுபடி தீர்ப்பாகும் படி கேட்டுக்கொள்கிறேன்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-**

எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கினங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.11.21 14:56:48 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*